609

ஸ்ரீ

நடுநாட்டுத் திருப்பதிகளுள்

ஒன்றாகிய

திருக்கோவலூரில்

விளங்கும்

# ஸ்ரீ பூங்கோவல் வல்லித்தாயார்

## ஸ்தோத்ரம்

அன்னாள டியார்க் கடியன்

பாடியது.

---

கலாரத்நாகரம் அச்சுக்கூடம்,

சென்னை.

---

Q25: 211 TR
N19
17979



ஸ்ரீ பூங்கோவல் வல்லித்தாயார்.

ஸ்ரீ

## பாயிரம்.

அருமறை முடியி னணி யென விலகவ்
வொருதனி முதலி னுர முறை மலராள்
கருணை யின் வழியுட் கசடற மொழியும்
திரு நரவரியின் றெருளிசை யிதுவே.

## நூல்.

### எண்சீர்விருத்தம்.

உலகமெலாந் திருவுள்ள முற்ற வாறே
  உண்டாக்கிக் காத்தொழிக்கு நாத னேனும்
இலகுமவன் திருமார்பி னுறையு மந்த
  இந்திரையி னிங்கிதத்தை யனுச ரித்தே
அலகிலவாம் விளையாட்டா யவள்க ளிப்ப
  அமைத்துள்ளா னச்சுதனே; மெச்சு மந்தத்
தலைமையுறு மெந்தாய்ப்பூங் கோவல் வல்லி
  தந்தருளு மங்களங்கள் நமக்குத் தானே.

அகிலபுவ னங்களுக்கு மன்னை யாமெம்
    அலர்மலரா லயவல்லீ! யுனைத்துதிப்பேன்
தகைமையுறு தகுவாக்கும் பொருளு மொன்றத்
    தங்குமிசை தந்தடியேன் சிந்தைதன்னை
வகையுடனின் வசமாக்கி, வணங்கு வேனை
    மனங்களிப்பித் தருள்புரிவாய்; வல்வினையேன்
அகலவொணு இலக்காக அமைந்து ளேனின்
    அருளாழிப் பெருக்கலையின் திவலைக் கார்ந்தே

தோத்திரமென் பதுதானென் ? சொல்வி ரந்து
　　தொடுத்தில்லாக் குணமாலை சூட்டலாயின்
சாத்தியமுன் னிடமாகா தெக்குணந்தான்
　　சார்ந்திலதுன் னைத்தழுவி யஃதிலாமே
சாத்திரத்தின் படிப்பலவாய்த் தழைந்திலங்குந்
　　தகைமையுறு முனது குண சாகரத்தைச்
சூத்திரமா யுள்ளபடி முகத்த லாயிற்
　　றூன்மறைபோற் சுரகுருவுந் துளங்கு வானே.

5

வாக்கினுக்கு மனத்தினுக்கு மெட்டிலாத
வகைகொண்ட வின்னமுத குணமெலாமென்
நாக்கினினீர் சுரப்பநசை தீர வென்வாய்
நவிலநனி நாடுமிதி லிலையென்க்கோர்,
ஏக்கறுதல்; சாத்தியமே யில்லை யேனும்
இந்துவினிற் சந்திரிகை யெல்லாங் கூட்டிப்
போக்கியமாய்ப் பருகிடச்ச கோரிப்புள்ளும்
பூங்கோவல் வல்லீவாய் பூட்டாதாமே.

ஆசையிலே னன்புமிலே னுன்பா லன்றாய் !
அறிவிலனு யுன்பணியி லமரே னேனும்
பேசரிதாம் புகழ்பெற்றுத் தூயதாமுன்
பேரின்பப் பெருக்கென்னுங் குணத்தை யென்றன்
மாசுறுவா யால்வழங்க எனக்கோ ரச்சம்
மானமிவை யில்லைவர நதியை நாயும்
ஆசையுட னக்கவதன் தாபமாற்றும்
ஆற்றினது பரிசுத்தம் குறைந்தி டாதே.

## வேறு.

சீராரு முன்கொழுநன் புருடோத்த மன்னுதி சேடன் சிறந்த வணையாம்
செப்பினுன் ஞஸநம் வாகனந்திகழ்வேத மூல வுயிர்வ யினதேயன்
சாராது ளோர்க்கிச் சகந்தன்னை மோகிக்கு மாயை யதனக் கோர்திரை
சதுர்முகன் சங்கரன் முதலான தேவர்தந் தேவியருடன் னடியார்
பேரானதோ வுனது பெருமை யெல்லாஞ் சுட்டும் "ஸ்ரீ" யென்பதே யாதலின்
பிரசித்த மாமறையின் பிரமாண முகமாமுன் பெருமையையுள்ளவாறே
ஆராலு ரைத்த லொரு சாத்தியம் அதிலுமிக மந்தமதி யான வெளியேற்
காகுமோ வாதிபுரி யாந்திருக் கோவலூ ரல ராலயா ! வன்னாயே.

ஆயினும் புகழுவ னச்சமே யிலனாயு னாச்சரிய மகிமை யேனும்
அன்றெனிலை நீத்தின் றுனக்கடிமை யானறிந் துன்சரண் புகவில்லையோ
ஆயிரவி தத்திலப ராதியே னாயினு மெனாதிநிலை மாறி யிலையோ
அகிலலோ கேச் வரனு மிவ்வற்பனுக் காய்த் தனாணை தனைமீறிடுவனோ
ஆயினொரு காலத்த வன் மீற வுன்னிடின் நீயவன் பாங்கரிலையோ
அன்னவனா னாதீன னல்ல னோ வல்லபை நீயவற் காகி யிலையோ
சேயினது மழலையே யன்னையின் செவிக்கமுத நீ யெனக்கன்னை யன்றோ
செகமெலாஞ் சீறினு மதைச்சிறிது மஞ்சி லேன் தேகளீசன் தேவியே.

கண்ணிற் சிறந்தவன் செந்தா மரைக் கண்ண னுயினு மவன் காந்தையாம்
கமலாய்! கலப் பொன்று மில்லாத கருணையே சொரியுமுன் கண்ணிடத்தே
எண்ணிற் சிறந்திலகு மகிலசம் பத்துமே யெத் திசை யுன் விழி யேகுமென்
றெதிர் நோக்கு டன் ருமு முடனேகி முன்னோடு மெத்தனங் கொண்டிருக்
எண்ணிற் சிறந்தவிக் கருணுயிர் தந்தவிர ஏனைய உயிர்க்கு முய்யும் [கும்
இதர சாதன மொன்று மிக பரங்கட் கென்று மில்லை யாதலி னுன்னையே
திண்ணமாய் முன்னிட்டுன் தேவனைத்துதி செய்யுந் திரிபுவனமுஞ் சிறந்தே ;
தேவாதி தேவனுக் கருமையா மாவியே தேகளீசன் தேவியே.

## வேறு.

இன்றே சுதினம் மெளியே னிதயத்
திருள்போ யொளி யொன்று புகுந்துளதால்
என்றேனு மிதன் மு னுணர்ந் திலனிவ்
வீடேறு மகோற் சவமென் மனதே
நின்றேன் தனியே னென நைந் துருகி
நிகரற்றிடுதன் நினைவூட்டி னள்காண்
ஒன்றேயென நின் றவன் மார்பிலவற்
குயிரா மலரா லயவுத்தமியே.

11

பாலாழி கொலோ பரமன் பதமோ
    பதமா மதுபா யரவிந்தமதோ
மாலாக மதோ சனகன் தசரத
    மணிமா நகரின் திருமா ளிகையோ
நாலா ரணவான் முடிதானதுவோ
    நளினீ யெளி யேன் மிசைவாஞ்சையுடன்
கோலா கலமா யொருகோ யிலினைக்
    குடிகொள்ள வமைத் தரு ளென்மனமே.

உன்னாதனை யஞ்சி யுனைச்சரணா
யுறுவோர் முறையீடுகளுக்குருகி
அன்னா னருளின் பிரசாத மதை
அபராத மறந்த வருக் குதவி
இன்னாரிதயந்தனையும் முறையே
இலகும் பரிபா கமுறக் கொளுவாய்
அன்னா யடியோங் கடமக் கமுதே
அருளேவடி வா இயமர்ந் தவளே.

பெரிதே யெனினுஞ் சிறிதே யெனினும்
    பிரபஞ் சமதற் குறு பாக் ய மெலாம்
வரதே வதையா மலரா லய நின்
    மலரம் பக வீட் சிய மென் பரிதைக்
கருதே மொரு வித் தை யெனக் கமலாய் !
    கமலானன காரண நாரணனே
விருதேந் துமவன் விபவங்க ளுமுனி
    விழியால் விளையும் மென மெச்சுவனே.

### வேறு.

சுந்தரனுமுன் துணைவனுக்குற்ற
வைபவமகிலமு முன்னால்
வந்துள வென்னி லன்னவன் மகிமை
மழுங்குமோ வெவ்விதமேனும்
இந்திர நீல விரத்தினத் தின்க
ணிலகுநீ ரோட்டமே யதற்குத்
தந்திடு மேற்ற மென்னிலம் மணிக்குத்
தனிமையுந் தாழ்மையு முளதோ.

### வேறு.

மாதே மலரா லயமா தவனுன்
　　மகி மாந் தமறிந்தி லனீயு மிலாய்
ஏதே னுமுலோ பமதுண்டு கொலவ்
　　வெல்லா மறி பே ரறி விற் கிதுதான்
யாதே யெனிலுள் ளனயா வுமறிந்
　　தில்லா தன வற்றி லொரஞ்ஞு தையாம்
மீதா மரை நம்பு மவர் மதிதான்
　　மிதமிஞ்சி மயங்கியபே யறிவே.

16

## வேறு.

முன்னாண் முகுந்தன் பணி மூன்ற மைத்துன்
முகமாயளித்த லதெனும்
தன்னாணை தன்னை வகையாய்ச் செலுத்தச்
சங்கற்ப முற்ற தகையால்
அன்னா யலர்ந்த மலரா லயாகின்
னாதீன மாகி யுளனால்
உன்னா யகன்கொள் விரதத்தை யுன்னி
யுலகர்த ழைப்பவருளே.

17

உன்னைக்க மின்றி யுதவா னெவர்க்கு
முன்னாத னாதி பகவன்
முன்னைக்கமுர்ற சரிதந் தெரிந்துன்
முகநோக்கி நின்ற தறிவாய்
நன்னைக்கிழந்த காகத்தை நோக்கி
நாலைந்து நயனமுடை யோன்
றன்னைக்கமுற்ற தசை நோக்கி நின்றும்
யாரே யுன்ற கைமை யறியார்.

பாலாழிதன்னி லவதாரஞ் செய்த
பாவாயு னமுத மொழியை
மாலானமாய னெவ்வாறு கேட்டு
மதியா திருப்பனு ரையாய்
காலானடந்து வனமேக நின்ற
காலத்துமுனது சொலையே
மேலானதாக உன்னோடு மெச்சி
விரிகானடந்து முளனல்.

அருளேதிரண்டோர் வடிவா யமைந்த
    அலராலயா வனதிபன்
கருணாமிர் தத்தின் கடலா மெ மீசன்
    கயலானனத்த னெனினும்
இருளே நிறைந்து வினை யான் மெலிந்த
    எளியே மவன் முன் தனியே
அருளேற்ப வஞ்சி நின்றே முன் முன்னர்
    அனையே யெமக்குன் றுணையே.

வாயாலுங் காய மதனா லுமாய
    மனதாலுந் தூய்மை யிலனிப்
பேயான மாயப் பிரபஞ்ச வாழ்க்கை
    பெருவாழ்க்கை யென்றுமதியா
ஓயாதுகொண்ட நோயால் வருந்தி
    உனையின்றடுத்த முறையால்
தாயான நீ யித்தனியாமுன் சேயைத்
    தயையால ணைத்தன் முறையே.

## வேறு.

வீட்டினைவிட்டு வெளிப்பட வந்துளம்
வீண் விளையாட்டின நேரம்
ஊட்டிவளர்த்த வெ மன்னை யுணர்ந்தது
முருகிய சிந்தை யளாய்
வாட்டமுகத்துட னஞ்சி வருந்தி யெம்
வரவினை யெதிர் நோக்கும்
ஓட்ட மெடுத்தவ டாள் களணைத்திட
ஓடுதும் வா மனனே.

அண்டிந மன்னையி னேக்குறுமுன்ன
மாற்ற னமக்கமையும்
தொண்டை விரிந்திடத் துர்க்குறி கொண்டந்
துயரம் வெளிப்படவே
கண்டது நங்கறை யாவு மறந்துளங்
கரைந்து நமக்கருளும்
பண்டொரு பாதக காகமு முய்ந்திடப்
பண்ணினள் வா மனனே.

23

நஞ்சையின் பாகினனைத்து நமக்குந
னுண்டியெனப் படியா
வஞ்சனையிற்றருமைவர் பகைவர்கள்
வாலிபரேம் மயலால்
விஞ்சு மினிப்புட னுண்டது மவ்விட
வேதனை கொண்ட நமக்
கஞ்ச லெனத்தரு மன்னை மருந்தினி
தாற்றிடும்வா மனனே.

தந்தை முனிந்திடில் தாய் பரிவாளெனைத்
    தண்ணளி கொண்டவன்முன்
விந்தைபிழையிவர் மேவின ரென்பது?
    மேவினதும் பிழையோ?
" நிந்தை தகுந்தில " தென்னலும் புன்னகை
    நிலவ வருள் புரிவான்
எந்தை தயாபர னென்பது கேட்டிலை
    யேயிதன் முன்மனனே.

25

தாயினு மன்பு தரித்தவர் யாவர்
சகத்துறு முயிர் கடமக்
காயின செய் மலரா லயவல்லியொ
ரன்னையலா தெவரே
பேயெனநின்ற தொர் பிள்ளையதே பெறும்
பெற்ற வளன்பை யெலாம்
ஆயினெமை விட யாருளர் பேயர்க
ளாதலின் வா மனனே.

## வேறு.

சாது சங்க மெங்கு மங்குஞ் சங்கடங்கள் பொங்குநாள்
    தரையிலன்று மானிடந்தரித்துநின்ற சானகீ
மாதுகௌசலை மகற் கொராவியான உன்னையும்
    வனநடந்து போவெனுவழங்கி ஞேருமில்லரே
தீதுசெய்யரக்கரிட்ட சிறையறுத்த வுன்னிடில்
    தென்னிலங்கை நீ தனைந்து சிறை யிருத்தல் வேண்டுமோ
ஏது வொன்று மில்லதா முன்வாற்சலீய மென்னவோ
    இலகு முன் தயைக் கெடுப்பு மீடு மொன்று மில்லையே.

பன்ன காச னத்து சுகந்த பள்ளி தன்னை நீங்கி யிப்
பாரில் விந்தை யாயு கந்த மானி டம்ப ரிக்கினும்
மன்னவர்த மாளி கைய லங்க ரிக்க நின்றநீ
வன நடந்து னிணை பிரிந்தவ் வஞ்ச கன்வ சத்தளாய்
பன்னரும் படாத பாடரக்கிமார் கைப் பட்டுமெப்
பாவி யோர்த ரைப்ப டாத வண்ண மேப ரிந்தனை
இன்ன தென்று ணர்ந்தி லேமு னருளின் வன்ன மைதிலீ
ஏது வொன்று மில்லை யென்னி லெல்லை தானு மில்லையே.

## வேறு.

ஆங்கார மெனு மகத்தா
    மாகமத்தினளவிலவா மாசையென்னும்
பாங்கான சாகையடர்
    பலதிசையும் பரவு கிளைபற்றிப் பாய்ந்து
தூங்காமே யெப்பொழுதுந்
    துயர்க்கனிக ளேதினுமென் மனக்குரங்கைப்
பூங்கோவல் வல்லீயுன்
    பொன்னடிக்கீழ் வசமாக்கிப் போற்றுவாயே.

### வேறு.

பொன்னினைப் பொலிவார் பூவினை ப்பூவா
லயமெனு மாரணப் பொருளைக்
கன்னலை யமுதக் கடலினு ளமிழ்தைக்
கலப்பிலாக் கருணையங்கடலை
இன்னலுக் கினிய மருந்தினை நீல
எழிலியிற் கெழில் தரவிணையும்
மின்னினை வேண்டும் பொருளெலா முதவுங்
கற்பக வல்லியை வியப்பாம்.

மண்ணெலா மளந்த வுன் மணவாளன்
மலரடி களு மளக் கொண்ணு
எண்ணி லென் வினைக ளாவினை யெய்ப்ப
வளர்ந்தெனை வயிரமார் விழுதாய்
மண்ணிலூடு ருவ விட்டுள வன்றேழ்
மராமர மெய்த வுன் மகிழ்நன்
நண்ணி மீட் டென்னை நன்னிலை நாட்ட
மைதிலீ நயந்தருள் வாயே.

காவெனக் காகங் கரைந்திடுங் கலியிற்
கட்டுரை கொள்பவர் போலும்
தாவெனக் குழறுங் குழவியினுரையிற்
றாய் மனம் மகிழ்வது போலும்
பாவெனக் கொண்டிப் பசையிலார்ப் பிழ்கோர்
பசுமையைத் தந்து மக் கென்றே
நாவெனக்கீந்த தென்று னாயகனே
டுரைத்தெனை நயந்தருள் வாயே.